Australian Government
Australian Taxation Office

# தற்போதய வரிக்கான காலப்பகுதியில், தங்களது வரி விபரத்திரட்டைச் சமர்ப்பிக்கும்போது எதனைக் கவனிக்கவேண்டும்

இந்த வரிக்காலப்பகுதியில், சிலர் பொய்யாகத் தம்மை வரிமுகவரெனவெளியிடும்போதும், தவறான கோரிக்கைகளைச் செய்து பெருமளவு பணத்தைத் திருப்பிப்பெற்றுத்தருவதாக வாக்குறுதி செய்யும்போதும் கவனமாக இருங்கள்.

### உங்கள் வரி முகவர் பதிவுசெய்யப்பட்டுள்ளரா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்

நீங்கள் ஒரு வரி முகவரை உபயோகிக்கும்போது, அவர் Tax Practitioners Board உடன் பதிவுசெய்யப்பட்டுள்ளாரா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

பரிசீலனைக்காக **tpb.gov.au** என்ற இணயத்தளத்தைப் பாருங்கள்.

வரிமுகவர்கள் மாத்திரம்தான், உங்கள் வருமானவரி விபரத்திரட்டைத் தயாரிக்கவும், சமர்ப்பிக்கவும் கட்டணம் அறவிட முடியும்.

### தங்கள் **myGov** பதிவுத் தகவல்களைப்ஏனையோரிடம் கொடுக்கவேண்டாம்

தங்கள் வரிவிபரத்திரட்டைச் சமர்ப்பிப்பதற்கு உங்கள் myGov பதிவுத் தகவல்கள் உங்கள் வரி முகவருக்குத் தேவைப்படாது.

தங்கள் myGov login தகவல்கள் தங்களின் தனிப்பட்ட ஒன்றாக எபோதும் வைத்திருக்கப்படவேண்டியது, மற்றும் ஏனையோருடன் பகிரக் கூடாது.

நீங்கள் ஒரு வரி முகவரைப் பாவித்தாலும்கூட உங்கள் விபரத்திரட்டிலுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என்பதை நிச்சயப்படுத்திக்கொள்வது தங்களது பொறுப்பாகும் என்பதை ஞாபகத்தில் வைக்கவும்.

### உங்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டதாக நீங்கள் நம்பினால்

நீங்கள் பாதிப்படைந்து விட்டதாக நம்பினால், உங்கள் நிலவரம் பற்றிக் கலந்துரையாட ATO வை **13 28 61** இல் அழையுங்கள்.

வரி முகவருடைய நடத்தைகள் குறித்து நீங்கள் கவலைகொண்டால் Tax Practitioners Board க்குக் கூட நீங்கள் அறிவிக்கலாம்.

ஒரு முறையீட்டைச் செய்வதற்கு **tpb.gov.au/make-complaint** க்கு நீங்கள் போய்ப்பார்க்கலாம்

### வரிக்கால குறிப்புகள்

எந்தவொரு செலவுகளுக்குமான பதிவுகளை நீங்கள் வைத்திருப்பதனை நிச்சயப்படுத்திக் கொள்ளவும்.

வேலை தொடர்பான கழிவினைக் கோருதல்:

- நீங்கள் செலவு செய்த அதேநேரம் திரும்ப பெற்றுக் கொள்ளப்படாத செலவாக இருக்க வேண்டும்
- உங்கள் வருவாயைத் தேடுவதில் அது நேரடியாகத் தொடர்புபட்டிருக்க வேண்டும்
- அதை நிரூபிக்க உங்களிடம் ஒரு பதிவு இருக்க வேண்டும்.

### உங்கள் விபரத்திரட்டைச் சமர்பிக்க உதவி தேவையா?

உங்கள் வரி விபரத்திரட்டைச் சமர்பிக்க உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், ATO வினது இலவச Tax Help திட்டத்திற்கு நீங்கள் தகுதியுடையவராகக் கூடும். சில இடங்களில் ஆங்கிலம் தவிர்ந்த மொழிகளில் Tax Help கிடைக்கும். மேலதிக தகவல்களுக்கு **ato.gov.au/taxhelp** க்குச் சென்று பார்வையிடவும்.

ஆங்கிலம் உங்கள் முதன்மை மொழி இல்லாதுபோனால், உதவிக்காக ATO வினது Translating and Interpreting Service (TIS) ஐ **13 14 50** இல் தொலைபேசியில் நீங்கள் அழைகலாம்.

**ato.gov.au/otherlanguages** இலும்கூட ஆங்கிலம் தவிர்ந்த மொழிகளில் வரி பற்றிய தகவல்கள் கிடைக்கும்.

myTax

அதிக தகவல்களுக்குப் போய்ப்பார்க்கவும் **ato.gov.au/lodgmentsafety**

NAT 75226TAM-09.2019 DE-8892